**MCOP: 28/2024**

Date: 01.04.2026.

ம.சா.1 முருகேசன், த/பெ. தங்கவேல்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :–</u>**

1. **ம.சா.ஆ 11** ரசீதுகளுக்கான மருத்துவரின் பரிந்துரை சீட்டுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவரின் பரிந்துரை சீட்டு இருந்தால் தான் மருந்து வாங்க முடியும் என்றால் சரிதான். மருந்து வாங்கியவுடன் அந்த பரிந்துரை சீட்டுகளை திரும்ப கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். **ம.சா.ஆ 11 ல்** உள்ள ரசீதுகளில் 19 பில்கள் விபத்திற்கு முன்பும் 5 பில்கள் விபத்திற்கு பின்பும் உள்ளது என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன்பின்பு ராஜேஸ் திலக் மருத்துவமனையில் 6-12 மாதங்களுக்கு பின்பு சிகிச்சை பெற்றேன். இடைப்பட்ட காலத்தில் நான் சிகிச்சை பெறவில்லை என்றால் வருமானம் இல்லாததால் நாட்டு மருத்துவம் பார்த்தேன்.

2. தற்போது வரை நாட்டு வைத்தியம் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **ம.சா.ஆ 2 ல்** விபத்து பதிவேட்டு நகலில் எனக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சொன்னால் சரிதான். **ம.சா.ஆ 12 ல்** தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின்படி எனக்கு ஏற்பட்ட ஊனம் பற்றி நிர்ணயம் செய்ய மருத்துவக்குழுவின் பரிந்ததுரையின்படி 6 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். எனக்கு மருத்துவக்குழு 5% பகுதிநிரந்தர ஊனம் நிர்ணயித்துள்ளது.

3.நான் தாக்கல் செய்து மருத்துவ பில்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 23.03.2023 , 05.05.2023 ஆகிய இரண்டு தேதியிட்ட பில்களும் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. **ம.சா.ஆ 11**ல் உள்ள விபத்திற்கு முன்பு ஏற்பட்ட 19 பில்கள் தவறுதலாக இவ்வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எனக்கு ஊனமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் பயணம் செய்த 3 வழக்கறிஞர்களும் வழக்கு தாக்கல் செய்து லோக் அதாலத்தில் உரிய இழப்பீடு பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு லோக் அதாலத்தல் கலந்து கொள்ள அறிவிப்பு வரவில்லை. நான் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என்றால் சரியல்ல. நான் கோரிய இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

**ஒம்/–R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**